NEW

கல்வி அமைச்சு
අධ්‍යාපන අමාත්‍යාංශය
Ministry of Education

33 | S | I

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை
අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍යපෙළ) විභාගය.
General Certificate of Education (Ord. Level) Examination.

வரலாறு II
ඉතිහාසය II
History II

மூன்று மணித்தியாலம்.
පැය තුනයි.
Three hours.

**கவனிக்க:**
(i) பகுதி ஒன்றின் வினா இலக்கம் 1 கட்டாயமானது.
(ii) பகுதி ii இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி iii இலிருந்து **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
(iii) எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (அ). கீழே I இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவ படத்திலும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்பட பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(ii). அம்பன் கங்கை,ஹீருற வாவி,பல்ல வங்க,கிம்மிதித்த,உடமல்ல,மினிப்பே
காலவாய்,அலிகல,பொலன்னறுவை,நாகதீபம்,கல்லோயா,ஹோபிடிகம,கம்மல்தொட
(12புள்ளிகள்)

(ii). கோவா,செங்கடகல,சிந்துநதி,நாகசாகி.ஜெனோவா,ஜெருஸலேம்
(6புள்ளிகள்)

(ஆ) (i). கீழே A,B,C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A.பெலிகலையில் தலதாமாளிகை அமைத்து தந்ததாதுவை பிரதிஷ்டை செய்த மன்னன்.

B.அரசன் மற்றும் பிரதான அதிகாரிகளை கொண்ட சபை

C.அரசுக்கு சொந்தமான நிலங்களில் பயிரிடுவதற்காக அறவிடப்பட்ட வரி

D.நாச்சதுாவ குளத்துடன் தொடர்புடைய நதி

A மற்றும் B யின் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களில் ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii)
1. A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நிர்மாணம் யாது?
2. இது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிரதேசம் யாது?
3. இந்நிர்மாணத்திற்கு உரிய காலப்பகுதி யாது?
4. இதனை பயன்படுத்தியோர் யார்?

A


(iii)
1. B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அரசர் யார்?
2. தற்போது இந் நிர்மாணத்தை எவ்விடத்தில் காணலாம்?

B


3. இவர் எவ் விகாரைக்கு காணிக்கையை வழங்கினார்?
4. இவர் வெளிநாட்டுத் தொடர்பை பேணி வந்த நாடு எது?

## பகுதி II

2. (i) வரலாற்றுக்கு முற்பட்ட கால தகவல்கள் கிடைக்கப் பெற்ற கரையோர வெட்டவெளி பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பெண்களின் உடலமைப்பின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iii) a. அரசியல் அதிகாரம் மையப்படுத்தப்பட்ட போது கையாளப்பட்ட "அலகபய மகாராஜா" எனும் சொல்லின் பொருள் யாது?

b. புராதான இலங்கையில் அரசுரிமை கையளிக்கப்பட்ட முறைகள் இரண்டினை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

(5 புள்ளிகள்)

(iv) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனுக்கும், முன்வரலாற்று கால மனிதனுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை பின்வரும் காரணிகளுடாக விளக்குக.

- குடியிருப்பு
- உணவுக்கோலம் (6 புள்ளிகள்)

3. (i) புராதான காலத்தில் இந்நாட்டில் செயற்பட்ட தென்னிந்திய வர்த்தக நிறுவனங்கள் மூன்றினை குறிப்பிடுக.?

(3புள்ளிகள்)

(ii) புராதன இலங்கையில் கட்டிட நிர்மாணம் மற்றும் பூங்கா அலங்காரம் தொடர்பில் மிக உயரிய தொழினுட்பம் ஒன்று காணப்பட்டமைக்கு இரு உதாரணங்கள் தருக.

(4புள்ளிகள்)

(iii)

A. கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடங்கியுள்ள கல்வெட்டுக்களை குறிப்பிடுக
   1. உள்நாட்டு வர்த்தகம் முறையாக இடம் பெற்றமை.
   2. குளங்களில் இருந்த நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர பாசிப்பயறு விதைத்தலாகாது.

B. வரலாற்று மூலாதாரங்களில் ஒன்றான கல்வெட்டுக்களின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) மிக புராதான காலம் தொட்டு இலங்கையில் பல்வேறு இனங்களுக்கிடையே சிறந்த இணக்கப்பாடு காணப்பட்டமையை உறுதிப்படுத்தும் மூன்று காரணிகளை குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

4. (i) புராதான காலத்தில் பௌத்த ஆராமைகளில் வசித்த பிக்குகளின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்ட பொய்கைகள் மூன்றினை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(ii) கீழே A,B,C,D என தரப்பட்டுள்ள புராதன தொழினுட்பம் தொடர்பான நிர்மாணங்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. ஓடும் நீரினை தடுத்து கனிசமான அளவு அமுக்கத்தை ஏற்படுத்தவதன் மூலம் நீரை மேலெழச் செய்தல்.
B. இடி மின்னல் தாக்கங்களில் இருந்து கட்டிடங்களை பாதுகாப்பதற்கான புராதன கால தொழிநுட்ப நிர்மாணம்.

C. சத்திர சிகிச்சைக்கான உபகரண பயன்பாடு

D. சுவரை நிலத்திற்கு செங்கோணமாக அமைத்து சுவர்களின் சமநிலையினை பேணுதல்

(4 புள்ளிகள்)

(iii) குளக்கட்டினை நிர்மாணிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்ட இரு காரணிகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) புராதான இலங்கையில் மட்பாண்டம் தயாரித்தல் மற்றும் ஆபரண உற்பத்தி தொடர்பில் உயரிய தொழினுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளமையை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(6 புள்ளிகள்)

5. (i) ஆங்கிலேயரின் கவனம் இலங்கை மீது திரும்பியமையில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் மூன்றினை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(ii) பிரித்தானியருடனான துாது தொடர்புகளின் போது பின்வரும் நபர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். அவர்களது பயணத்தின் நோக்கங்கள்,விளைவுகளை முறையே குறிப்பிடுக.

1782- ஹியூ பொயிட்

1795- றொபட் அன்ருஸ்

(4 புள்ளிகள்)

(iii) 1818 முதலாம் சுதந்திர போராட்டத்தின் விளைவுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) 1848 இல் இடம் பெற்ற இரண்டாம் சுதந்திர போராட்டத்திற்கு ஹோல்புறுக் கமானின் சீர்த்திருத்தங்கள் ஏதுவாக அமைந்த விதத்தினை மூன்று காரணிகள் ஊடாக விளக்குக.

(6 புள்ளிகள்)

6. (i) கீழே தரப்பட்டுள்ள வெளியீடுகளை அச்சிட்ட அமைப்புக்களை குறிப்பிடுக.

A.1832 மாசிக்க தேக்க

B.1840 லங்கா நிதானய

C.1842 உரகல

(3 புள்ளிகள்)

(ii) இலங்கையில் 1912 இல் செயற்பட்ட மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாடுகள் இரண்டினை குறிப்பிடுக

(4 புள்ளிகள்)

(iii) டொனமூர் அரசியல் யாப்பு சீர்த்திருத்தத்தின் விசேட பண்புகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) A. 1935 இல் இலங்கை சமசமாஜ கட்சியினை தோற்றுவித்த தலைவர்கள் இருவரை குறிப்பிடுக.

B. இலங்கையின் சுதந்திர போராட்ட செயற்பாடுகளின் போது ‘‘சூரியமல் இயக்கம்’ செயற்பட்ட விதத்தினை சுருக்கமாக விளக்குக.

(6 புள்ளிகள்)

7. (i) இலங்கையின் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பின் அடிப்படை பண்புகள் மூன்றினை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(ii) இலங்கையின் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்புக்கு அமைய பாராளுமன்றத்திற்கு உரிய அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iii) இலங்கையின் 1972 இரண்டாம் குடியரசு யாப்பிற்கு அமைய தேர்தல் முறைகள் இரண்டினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பின்வரும் காரணிகளை அடிப்படையாக கொண்டு விளக்குக.யு

- விவசாய அபிவிருத்தி
- கல்வி
- சமூக நலன்புரி

(6 புள்ளிகள்)

8. (i) வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சியினால் இத்தாலியில் தோற்றம் பெற்ற வர்த்தக நகரங்கள் மூன்றினை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடைய கண்டுபிடிப்பாளர்களை A,B,C,D எனும் ஒழுங்கில் எழுதுக.

A. புவியீர்ப்பு சக்தி
B. தொலை நோக்கி
C. கோள்கள் சூரியனை நீள்வட்ட பாதையில் சுற்றுதல்
D. குருதி சுற்றோட்டம் தொடர்பான தகவல்களை கண்டறிதல்

(4 புள்ளிகள்)

(iii) கைத்தொழிற் புரட்சியினால் சமூகத்தில் ஏற்பட்ட சாதகமான விளைவொன்றினையும் பாதகமான விளைவொன்றினையும் குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) கைத்தொழிற் புரட்சியானது இலங்கை மீது செல்வாக்கு செலுத்திய விதத்தினை மூன்று காரணிகளுடாக விளக்குக.

(6 பள்ளிகள்)

## பகுதி III

9. (i) ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் மூன்றினை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(ii) A. ''நானே அரசு'' என கூறிய மன்னன் யார்?

B. பிரான்ஸிய புரட்சிக்கு ஏதுவாக அமைந்த பொருளாதார காரணிகள் மூன்றினை குறிப்பிடுக

(4 புள்ளிகள்)

(iii) முதலாம் உலக போரின் குற்றவாளியான ஜேர்மனிக்கு ''வர்செல்ஸ்'' உடன்படிக்கையின் மூலம் விதிக்கப்பட்ட தண்டனைகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) இரண்டாம் உலக போரின் விளைவகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)